


■ முதலமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமி தலைமையில் நேற்று சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற விழாவில் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டம், கோயம்புத்தூர்- அவிநாசி சாலையில் அமைக்கப்படவுள்ள உயர்மட்ட நெடுஞ்சாலை, கரூர் மாவட்டம் நஞ்சை புகளூரில் காவேரி ஆற்றின் குறுக்கே கட்டப்படவுள்ள கதவணை, சென்னை வர்த்தக மையம் விரிவுபடுத்தும் திட்டம், வல்லூரில் அமைக்கப்படவுள்ள இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடட் நிறுவனத்தின் பெட்ரோலிய முனையம், அமுல்லைவாயலில் அமைக்கப்படவுள்ள இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்தின் Lube Plant திட்டம், சென்னை- காமராஜர் துறைமுகத்தில் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்தின் இறங்குதளம் அமைக்கும் திட்டம் ஆகிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். உடன் துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், சட்டப்பேரவை தலைவர் ப.தனபால், தொழில்துறை அமைச்சர் எம்.சி.சம்பத், தலைமைச் செயலாளர் க.சண்முகம், தொழில்துறை முதன்மைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுப்பணித்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.